**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

முன்னிலை : திரு.எம்.ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பட்டுக்கோட்டை.

2022 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு2053-ஸ்ரீசுபகிருது வருடம் ஆனித் திங்கள் 21 ஆம்நாள்

**இடைநிலை மனு எண் 349/2020**

**இன்**

**அசல் வழக்கு எண். 8/2019**

1. கௌரியம்மாள்
2. பக்கிரியம்மாள் ... மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள்

/ எதிர் /

A. தமிழ்செல்வி ...எதிர் மனுதாரர்/வாதி

இம்மனு 24.06.2022-ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. வீ. பிரகாஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. பி. ஜெகதீஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9-ன் படி மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் 2 ம்பிரதிவாதி என்றும், வாதியின் வழக்குரைக்கு மனுதாரர்கள்/1,2 எதிர்வாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்தும், வாதியின் நியமன மனுவிற்கும் எதிர்உரையும் இல்லை என மேலொப்பம் மனுதாரர்கள் /1,2 எதிர்வாதிகள்

M
RAVICHANDRAN
Digitally signed by M
RAVICHANDRAN
Date: 2022.07.05
17:54:53 +0200

தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் தாவாவிற்கும் பின்னரும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயமும், ஆணையர் ஆய்வு செய்யும் முன்பு வரையிலும் புல எண் 96/3-ன் தென்புற எல்லை 3ம் எதிர்வாதியின் நிலத்திற்கு வடபுறம் வரையில் உள்ளது என்றும், 3ம் எதிர்வாதியின் நிலத்தில் வடபுறம் உள்ள பூஸ்திதியில் பாதையாக உள்ள இடம் புல எண் 96/3-ல் தான் உள்ளது என்றும், அதுவரை உள்ள 8 அடி அகலம் பாதை என்று எண்ணிக்கொண்டிருந்த நிலையில் ஆணையர் பார்வையிடுவதற்கு முதல் நாள் வீட்டிலிருந்த R.O.R. புலப்பட நகல் கிடைத்து அதனை பார்க்கும்போது புல எண் 96/5-ல் வடபுறத்தில் பாதை உள்ளதாக காணப்பட்டுள்ளது என்றும், அளவையின் முடிவில் பூஸ்திதியில் உள்ள பாதை புல எண் 96/5-ல் வடபுறத்தில் பாதை உள்ளதாக காணப்பட்டுள்ளது என்றும், அளவையின் முடிவில் பூஸ்திதியில் உள்ள பாதை புல எண் 96/5-ல் வடபுறத்தில் தான் உள்ளது என்பது நிதர்சனமாக தெரிய வருகிறது என்றும், அந்த பாதை சுமார் 8 அடி அகலம் இருக்கும் என்றும், அதற்கு வடபுறத்தில் தான் புல எண் 96/3-ன் தென்புற எல்லை ஆரம்பமாகிறது என்றும், எனவே அந்த விஷயங்களை கண்டு புதியதாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் கண்டுள்ளவைகளுக்கு ஆதாரமாக R.O.R.ம் ஆணையர் வசம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், கிராமத்தில் உள்ளவர்களின் அபிடவிட்டும் தற்போது கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் ஆணையர் ஆய்வு செய்யப்பட்ட பின்னரும் R.O.R. நகல் கிடைத்த பின்னரும் சில உண்மைகள் தெரிய வந்ததால் அவைகளை நீதிமன்றம் முன்பாக கூடுதல் எதிர்வழக்குரையாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே மனுதாரருடைய கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமும், நியாயமுமாக உள்ளது என்றும், இல்லாதபட்சத்தில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும் எனவே இம்மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என கோரியுள்ளார்கள்.

**<u>3.எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**

மனு அபிடவிட்டில் கண்ட காரணங்கள் சரியல்ல என்றும், பல தவறான சங்கதிகளை கண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், வழக்கில் மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துவிட்டு தற்போது நீதிமன்ற ஆணையர் அளவை செய்யும் முன்பு வரை பாதை புல எண் 96/3 தென்புற

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2022.07.05 17:55:15 +0200

எல்லையில் 8 அடி அகலம் பாதை என எண்ணியதாகவும், அளவை செய்யும் முதல் நாள் R.O.R. நகல் கிடைத்து பார்த்தபோது புல எண் 96/5-ல் வடபுறத்தில் பாதை உள்ளது என தெரிந்து கொண்டதாக பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், அதன் அடிப்படையில் ஏற்கனவே சொல்லியுள்ள எதிர்வழக்குரைக்கு முரணாக தற்போது கூடுதல் எதிர்வழக்குரையில் கட்சி செய்துள்ளார் என்றும், அவ்வாறு கட்சி செய்ய மனுதாரர்கள் சட்டப்படி தடைபட்டுள்ளார்கள் என்றும், மனுதாரர்/1,2 பிரதிவாதிகள் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள போதிய காரணம் குறிப்பிடவில்லை என்றும், மனு அபிடவிட்டில் கண்ட காரணம் ஏற்புடையதில்லை என்றும், இந்த எதிர்மனுதாரர் /வாதிக்கு பாதை உரிமை கிடைக்கக்கூடாது என்ற நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளின் தாக்கல் செய்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,
" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?
என்பதேயாகும்".

**6. தீர்வு**

இருதரப்பிலும் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலித்த வகையில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால், மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்துக்களை பொறுத்து பாதை பாத்திய வசதியுரிமை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதை எதிர்த்து, மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் எதிர்த்து கட்சியாடி வந்து, அசல் வழக்கானது விசாரணைக்காக வாய்தா எழுந்த நிலையில், மனுதாரர்/2 ம்பிரதிவாதியால் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்க வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

7. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவித்தாலும், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரை

M RAVICHANDRAN
Digitally signed by M RAVICHANDRAN
Date: 2022.07.05 17:55:36 +0200

ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் வழக்கில் முழுமையான தீர்வு காண வேண்டும் என்ற காரணத்தால் மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை நீதியின் நலன் கருதி ஏற்றுக்கொள்ளத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. எதிர்மனுதாரர் /வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவித்தாலும், அசல் வழக்கில் இருதரப்பினருக்கும் போதிய வாய்ப்பு வழங்கினால் தான் அசல் வழக்கின் தீர்வுகளுக்கு ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தினால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை நீதியின்நலன் கருதி ஏற்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது,

9. முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2022 ம் ஆண்டு ஜூலை திங்கள் 5 ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2022.07.05 17:56:20 +0200

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2022.07.05 17:56:48 +0200

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பட்டுக்கோட்டை.

சீரான / வரைவு உத்தரவு

இடைநிலை மனு எண் 349/2020

இன்

அசல் வழக்கு எண் 8/2019

நாள் 05.07.2022